[6th August 1963

திரு. அ. பெ. தர்மலிங்கம் : நீண்ட கால தண்டனை பெற்ற கைதிகள் ராணுவத்தில் சேர்ந்து பணி ஆற்றவேண்டுமென்று அரசாங்கத்துக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு உத்தரவு ஒன்றும் வரவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : நீண்ட கால தண்டனை பெற்ற கைதிகளை பிராஜக்ட் ஏரியாக்களிலே அணைக்கட்டு வேலைகளிலும் மற்ற திட்ட வேலைகளிலும் பிற மாநிலங்களில் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த முறையை நமது அரசாங்கம் பின்பற்றுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் அப்போதைக்கப்போது பின்பற்றிக்கொண்டுதான் வரப்படுகிறது.

திரு. க. ர. நல்லசிவம் : ஆயுள் தண்டனைப்பெற்ற கைதிகளுக்கு அநேகமாக அவர்கள் உயிரைப்பற்றிய கவலையே இல்லாமல் இருக்கிறது. அவர்களை ராணுவத்தில் சேர்த்தால், ராணுவத்திற்கே வழிகாட்டக்கூடிய வகையில் நல்ல பங்கு எடுத்துக்கொள்வார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைப் பற்றி யோசனை செய்து சர்க்கார் ஒரு முடிவு எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பிரச்னை அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறதென்று சொன்னேன். ஒரு முடிவு எடுப்பதற்கு முன்னர் எல்லா அம்சங்களும் கவனிக்கப்படும்.

Cement factory

* 16 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the proposal to start a Cement Factory in the State in the public sector for meeting the requirements of the Government?

The Hon. Sri R. VENKATARAMAN : The Department of Industries is undertaking a detailed investigation on the extent of limestone deposits available in Ariyalur and Valliyur areas in order to select a suitable site with proximity to raw materials for the location of the proposed cement factory to be set up in the public sector.

Sri M. S. SELVARAJAN : Can the Government give details about the probability of time?

The Hon. Sri R. VENKATARAMAN : It will depend on the availability of limestone in both the areas. It is only after the investigation of the quantities available that any decision can be taken in the matter.

திரு. கரு. சீமைச்சாமி : மண்டபத்தில் ஆரம்பிக்க இருந்த சிமெண்டு தொழிற்சாலையில் எந்தவிதமான வேலையும் தொடங்கவில்லை. லைசென்ஸ் கொடுத்தவர் சரியான நடவடிக்கை எடுத்து வேலை செய்வதற்கு முன்வராவிட்டால் வேறு ஒருவருக்கு அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

6th August 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சர்க்கார் துறையிலே நிறுவுவதைப்பற்றியதாகும். தனியார் துறையைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து கொடுக்கப்படும்.

திரு. ம. கமலநாதன் : அண்மையில் சாமல்பட்டி ரெயில்வே நிலையத்திற்கு அருகே திப்பம்பட்டி கிராமத்தில் சிமெண்டு தயாரிப்பதற்கு உபயோகப்படும் வகையில் ஏழு லட்சம் டன் சுண்ணும்புக் கல் இருப்பதாக எல்லாப் பத்திரிகைகளிலும் தகவல் வந்தது. அது பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏழு லட்சம் டன் சுண்ணும்புக் கல் 10 அல்லது 15 நாட்களுக்குத் தான் வரும். அது சிமெண்டுத் தொழிற்சாலைக்குப் போதாது. இப்படி கொஞ்சமாகக் கிடைப்பதையெல்லாம் உபயோகிக்க முடியாது.

கனம் திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து அரியலூரிலும், வள்ளியூரிலும் போதுமான சுண்ணும்புக்கற்கள் கிடைக்காவிட்டால் இந்தத் திட்டம் கைவிடப்படுமென்று ஊகிக்க இடமிருக்கிறது. கரூர் பக்கத்தில் அதிகமாக சுண்ணும்புக்கற்கள் கிடைக்கின்றன என்று தெரிந்திருப்பதால் அந்தப் பக்கத்திலே தொழிற்சாலையை வைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : தமிழகத்திலே எந்தப் பக்கத்தில் சுண்ணும்புக்கற்கள் போதுமான அளவு கிடைக்கின்றன என்று பார்த்துக்கொண்டு வருகிறோம். இப்போது பரிசீலனை செய்வது இந்த இரண்டு இடங்களில்தான். அரியலூரிலும், வள்ளியூரிலும், போதுமான அளவு கிடைத்தால் சர்க்கார் துறையிலே ஒரு தொழிற்சாலையை வைக்கவேண்டும் என்பது சர்க்காரின் கொள்கை என்று நான் பட்ஜெட் விவாதத்தின்போதே சொல்லி இருக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : சங்கரிதுர்க்கத்திலும், கரூரிலும், இருக்கிற சிமெண்டு தொழிற்சாலையை சர்க்கார் துறையிலே எடுத்து நடத்தியிருந்தால் ஏராளமாக சர்க்காருக்கு நிகர லாபம் கிடைக்குமென்பது தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such intention.

திரு. வை. சங்கரன் : சர்க்கார் துறையில் ஆரம்பிக்கப்படவிருக்கிற சிமெண்டு தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் சிமெண்டு பூராவையும் நமது சர்க்காரே எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்குமா ? அல்லது நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் சிமெண்டு கோட்டாவிலே முதலாவதாக இதைப் பயன்பத்திக் கொள்ளக்கூடிய அனுகூலம்தான் கிடைக்குமா ? பூரா சிமெண்டையும் நம் இஷ்டப்படி உபயோகிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழிற்சாலை வைத்த பிறகு, மத்திய சர்க்காருடன் விவாதிக்க வேண்டிய விஷயம் இது.

[6th August 1963

திரு. கே. பொன்னையா : கோவை மாவட்டத்தில் தாராபுரம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தாலுக்காக்களில் ஜிப்ஸம் ஏராள மாகக் கிடைக்கிறது. நமது ராஜ்யத்திற்கு மட்டுமல்லாமல் பிற ராஜ்யங்களுக்குக்கூட சப்ளை செய்துகொண்டு வருகிறார்கள். அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ன தொழிற்சாலை யென்று சொல்லவில்லையே!

திரு. அ. பெ. தர்மலிங்கம் : கரூர் வட்டத்தில் சிமெண்டு உற்பத் திக்குப் போதுமான அளவு சுண்ணும்புக்கல் கிடைப்பதாகவும், அந்தத் தொழிற்சாலையை நிறுவ தனியார் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டு இருப்பதாகவும் நான் அறிகிறேன். அதைச் சர்க்காரே ஏற்று நடத்த முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான உத்தேசம் இல்லையென்று நான் அப்போதே சொன்னேன். பிராஸ்பெக்டிவ் லைசென்சுக்கு அப்ளிகேஷன் போட்டு, பிறகு இண்டஸ்டிரியல் லைசென்சுக்கு அப்ளிகேஷன் போட்டு ஒருவருக்குக் கொடுத்தாகி விட்டது. ஆகவே அதைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : வள்ளியூர், பன்னம்பாறை, நாசரத்தில் ஏற்கெனவே பூகர்ப்ப நிபுணர்கள் 90 லட்சம் டன் சிமெண்டு உற்பத்திக்கு லாயக்கான "க்ளே" இருப்பதாகக் கணித்திருக்கிறார்கள். இதை உபயோகிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாசரத்திலே இருக்கக்கூடிய சுண்ணும்புக்கல், அங்கே இருக்கும் நஞ்சை நிலங்களுக்கு அடியில் இருப்பதால், அந்த நஞ்சை நிலங்களை விலைகொடுத்து வாங்கி, தொழிற்சாலை நடத்துவது கட்டுப்படியாகாதென்று நான் இந்தச் சபையிலே முன்பே பதிலளித்திருக்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : தமிழகத்திலே இப்போது இருக்கிற சிமெண்டுப் பஞ்சத்தை எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பித்தால் தீர்க்கமுடியும்? இப்போது இருப்பதே போதுமா ? பலருக்கு சிமெண்டு கிடைப்பதிலே ஏதாவது குறைபாடுகள் இருக் கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தமிழ் நாட்டிலே சிமெண்டு பற்றுக்குறை தீரவே தீராது. காரணம் என்னவென்றால், நாம் உற்பத்தி செய்வதைவிட இங்கு அதிகமான தேவை இருக்கிறது. பல தொழிற்சாலைகளுக்கும், விவசாயத்திற்கும், இன்னும் பல துறை களுக்கும் பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிற காரணத்தால், அதை ஈடுசெய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது.